பணிப்புரை இல. 20

### 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டம்

12 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் பிரிவு 12 (1) இன் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் மாதிரிகளுக்கு அமைவாகவும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட எஸ். எல். எஸ். உற்பத்தி சான்றுப்படுத்தல் குறியீட்டுக்கமைவாகவும் இணங்கினாலன்றி கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் உருக்கு வகைகளை தயாரிப்பாளர், இறக்குமதியாளர், விநியோகஸ்தர் அல்லது



2- G009342



வியாபாரி எவரேனும் தயாரிக்கவோ இறக்குமதி செய்யவோ, விநியோகம் செய்யவோ களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனை செய்யவோ, அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ அல்லது விற்பனைக்காக வைப்பதற்கோ அல்லது விற்பனைக்கு விடவோ முடியாது என பணிப்புரை வழங்குகின்றது.

(i) கொங்கிரீட் மீள் வலுவூட்டலுக்கான முறுக்கிய உருக்கு சட்டங்கள் - எஸ். எல். எஸ் 375
(ii) கொங்கிரீட் மீள் வலுவூட்டலுக்கான சாதாரண உருக்கு சட்டங்கள் - எஸ். எல். எஸ் 26

இப்பணிப்புரையானது, 2008, மாச்சு 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2008, சனவரி 25.

2- 284/2

---

பணிப்புரை இல. 21

### 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டம்

12 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் பிரிவு 12 (1) இன் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் வழங்கப்படும் எஸ். எல். எஸ். உற்பத்திப் பொருள் சான்றுப்படுத்தல் குறியினை கொண்டிருந்தாலன்றி கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏதேனும் உருக்கு வகையினை தயாரிப்பாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி எவரேனும் தயாரிக்கவோ, விநியோகிக்கவோ, களஞ்சியப்படுத்தவோ, அல்லது மொத்த விலையில் அல்லது சில்லறை விலையில் விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, விற்பனைக்கு வைக்கவோ, விற்பனைக்கு விடவோ முடியாது எனவும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள 2006 ஆம் ஆண்டின் இறக்குமதிகள் (நியமப்படுத்துதல் மற்றும் தரக்கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் தொழிற்படுத்தப்படும் இறக்குமதி பரிசோதனை செயல் திட்டத்தின் கீழ் விற்பனைக்கென பரிசோதனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி, கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் உருக்கு வகையினை இறக்குமதியாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி எவரேனும் இறக்குமதி செய்யவோ, விநியோகிக்கவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது மொத்த விலையிலோ அல்லது சில்லறை விலையிலோ விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்கு காட்சிப்படுத்தவோ, விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனை செய்ய கோரவோ முடியாதென பணிப்புரை வழங்குகின்றது.

(i) கட்டமைப்பு மற்றும் பொறியியல் தேவைக்கென சூடாக்கி முறுக்கப்பட்ட உருக்கு சட்டங்கள்

(ii) பொறியியல் தேவைக்கான மெல்லிய உருக்கு கம்பி

(iii) கம்பி ஆணிகள் செய்வதற்கான குளிரூட்டப்பட்ட மெல்லிய உருக்கு கம்பிகள்

(iv) சூடாக்கி முறுக்கப்பட்ட உருக்கு சட்டங்களின் பரிமாணங்கள் மற்றும் பகுதிசார் தன்மைகள்

இப்பணிப்புரையானது, 2008, மாச்சு 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2008, சனவரி 25.

2- 284/3

---

பணிப்புரை இல. 22

## 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டம்

### 12 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் பிரிவு 12 (1) இன் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் வழங்கப்படும் எஸ். எல். எஸ். உற்பத்திப் பொருள் சான்றுப்படுத்தல் குறியினை கொண்டிருந்தாலன்றி கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பிவிசி குழாய்களையும் பொருத்துக்களையும் தயாரிப்பாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி எவரேனும் தயாரிக்கவோ, விநியோகிக்கவோ, களஞ்சியப்படுத்தவோ, அல்லது மொத்த விலையில் அல்லது சில்லறை விலையில் விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, விற்பனைக்கு வைக்கவோ, விற்பனைக்கு விடவோ முடியாது எனவும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள 2006 ஆம் ஆண்டின் இறக்குமதிகள் (நியமப்படுத்துதல் மற்றும் தரக்கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் தொழிற்படுத்தப்படும் இறக்குமதி பரிசோதனை செயல் திட்டத்தின் கீழ் விற்பனைக்கென பரிசோதனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி, கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் குழாய்களையும் பொருத்துக்களையும் இறக்குமதியாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி எவரேனும் இறக்குமதி செய்யவோ, விநியோகிக்கவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது மொத்த விலையிலோ அல்லது சில்லறை விலையிலோ விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்கு காட்சிப்படுத்தவோ, விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனை செய்ய கோரவோ முடியாதென பணிப்புரை வழங்குகின்றது.

(i) குடிக்கத்தக்க குளிர் நீர் வழங்கலுக்கான கடினமான வளையாத பிளாஸ்ரிக் குளோரைட் குழாய்கள் - எஸ். எல். எஸ். 147

(ii) குடிக்கத்தக்க குளிர் நீர் வழங்கலுக்கான கடினமான வளையாத பிளாஸ்ரிக் குளோரைட் குழாய் இணைப்புக்களும் பொருத்துக்களும் - எஸ். எல். எஸ். 659.

இப்பணிப்புரையானது, 2008, மாச்சு 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு- 01,
2008, சனவரி 25.

02- 284/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.